**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC No.57/23 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.4 |
| பெயர் | சிவா | கிராமம் | |
| தந்தை / கணவர் பெயர் | தேவேந்திரன் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.K.Arumugam, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 24.02.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.

Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் புதுக்கோட்டை மாவட்டம் பி.மாத்தூரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய தகப்பனார். ஆஜர் எதிரி என்னுடைய சித்தப்பா ஆவார். 09.01.2022 தேதியில் காலை சுமார் 10.00 மணிளவில் எங்களுக்கு சொந்தமான பி.மாத்தூரில் முருகன்கோவிலுகது பின்புறம் உள்ள தோட்டத்தில் எனது தகப்பனார் எங்களது தோட்டத்திற்கு சென்றார். என் தகப்பனார் தோட்டத்தில் வேலை பார்த்துகொண்டிருந்தபோது ஆஜர் எதிரி மரங்களை வெட்டுவதற்காக 2 நபர்களை அழைத்து வந்திருந்தார். அந்த மரங்களை விலைக்கு அவர்களிடம் எனது சித்தப்பா பேசிக்கொண்டிருந்தார். அப்போது எனது தகப்பனார் ஆஜர் எதிரியிடம் எனக்குரிய பாகத்தைை கொடுத்துவிட்டு மரத்தை வெட்டிக்கொள் என்று சொன்னார். உனக்கு பாகம் கொடுக்கவேண்டும் தானே என்று சொல்லி வீட்டிற்கு சென்று எடுத்துவருவதாக சொன்னாார். மீண்டும் எனது சித்தப்பா வந்து துண்டில் மறைத்து வைத்திருந்த கத்தியை வைத்து எனது தகப்பனாரின் வயிற்றில் வலது மற்றும் இடது பக்கத்தில் கத்தியால் குத்தினார். அது சம்மந்தமாக எனது தங்கைக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். எனது தங்கை சொல்லி

பாக்கியராஜ், கிருஷ்ணமூர்த்தி, எனது தங்கை, எனது தாயார் எங்களது தோட்டத்திற்கு சென்றனர். அப்போது நான் வெளியில் இருந்தேன். எனக்கு போன்மூலம் தகவ்ல சொன்னார்கள். நான் புதுக்கோட்டை அரசுமருத்துவனைக்கு சென்று பார்த்தேன். எனது தகப்பனார் மேற்படி விபரத்தை கூறினார். எனது தகப்பனாரை எனது சித்தப்பா கத்தியால் குத்தியதில் வயிற்றில் குடல் வெளியே வந்துவிட்டது. கிருஷ்ணமூர்ததியும், பாக்கிராஜ்ம் எனது தகப்பனாரை மருத்துவமனையில் சேர்த்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சம்பவத்திற்கு முன்பாகவே எனது பெரியப்பா, எங்கள் பாகத்தை கொடுத்துவிட்டார். பாகம் பிரித்தது சம்மந்தமாக எங்களுக்கும், எங்களது சித்தப்பாவிற்கும் மனவருத்தம் இருந்தது. சம்பவ தேதியில் நான் அருகில் சாமான் வாங்குதற்காக சென்றிருந்தேன். சம்பவம் குறித்து நான் கேள்விபட்டுதான் வந்தேன். வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு ஆதரவாக நான் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம குறித்து எனது சகோதரி எனக்கு தகவல் கொடுத்த விபரத்தை நான் போலிஸ் விசாரணையின்போது கூறவில்லை. நான் நேரடியாக மருத்துவமனைக்குதான் சென்றேன். அரசு மருத்துவமனையில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் கையெழுத்து எதுவும் பெறவில்லை. எனது தகப்பனார் என்னிடம் கூறியதுபோல் எந்தசம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/- சிவா

| |
|---|
| சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.<br>Sd/- திரு.K.S.பால்பாண்டியன்,<br>தலைமை நீதித்துறை நடுவர்,<br>புதுக்கோட்டை. |

# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure )

--

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC No.57/23 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.5 |
| பெயர் | செல்லம் | கிராமம் | |
| தந்தை / கணவர் பெயர் | தேவேந்திரன் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.K.Arumugam, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 24.02.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1–Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.

Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் புதுக்கோட்டை மாவட்டம் பி.மாத்தூரில் குடியிருந்து வரகிறேன். புகார்தாரர் தேவேந்திரன் எனது கணவர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது கணவரின் சகோதரர். 09.01.2022 தேதியில் காலை சுமார் 10.00 இருக்கும். எனது கணவர் தோட்டத்தில் கடலையை பாதுகாப்பதற்காக வயலுக்கு சென்றார். எனது கொழுந்தனார் தோட்டத்தில் உள்ள தேக்குமரங்களை வியாபாரிகளை வைத்து வெட்டுவதற்காக வந்தார். எனது கணவர் அப்போது பாகபிரிவினை பத்திரத்தை கொடுத்துவிட்டு, மரத்தை வெடடிக்கொள்ளுங்கள் என்று அவரை தேக்கினார். எனது கொழுந்தனார் வீட்டிற்கு போய்விட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு எனது கொழுந்தனார் கத்தியை எடுத்து கொண்டுவந்து எனது கணவரின் வயிற்றில் இடது பக்கமும் வலதுபக்கமும் கத்தியால் குத்தினார். எனது கணவர் எனது மகளுக்கு போன் செய்து சம்பவத்தை பற்றி கூறினார். நாங்கள் தோட்டத்திற்கு உடனடியாக சென்றோம். எங்களுடன் கிருஷ்ணமூர்த்தியும் பாக்கியராஜ்ம் வந்தார்கள். அப்போது தோட்டத்தில் எனது கணவர் வயிற்றில் குத்துப்பட்டு வயிற்றின் குடல் வெளியேவந்துவிட்டது. எனது மகள் உடனடியாக

தாவணியை வைத்து குடலோடு சேர்த்து கட்டினார். முதலில் புதுக்கோட்டை மருத்துவமனைக்கு சிகிச்சைக்குசேர்த்தோம். அங்குவசதியில்லாததால் திருச்சி KMC மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். அதன்பிறகு ஒரு வாரம், 10 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். நாங்கள் வயலில் சென்று பார்த்தபோது எனது கொழுந்தனார் அங்கு இல்லை ஓடிவிட்டார். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>

சுமார் 1 வருடத்திற்கு முன்பு எங்களுக்கும், எதிரிக்கும் பாகம் நடந்துள்ளது. அந்த பாகம் சம்மந்தமாக எனதுகணவருக்கும, எதிரிக்கும் மனவருத்தம் இருந்தது என்று சொன்னால் சரிதான். அது சம்மந்தமாக புகார் கொடுத்து ஏற்கனவே அதை போலிசார் விசாரித்துள்ளனர். எனக்கு எனது மகள் தகவல் சொன்ன அரை மணிநேரம் கழித்து எங்களது தோட்டத்திற்கு வந்து விட்டேன். அதன்பிறகு நாங்கள் அனைவரும் சேர்ந்து எனது கணவரை மருததுவமனையில் சேர்த்தோம். மருத்துவமனையில் வைத்து வழக்கு சம்பவம் சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். அது சம்மந்தமாக என்னிடம் கையெழுத்து எதுவும் பெறவில்லை. என்னுடன் எனது உறவினர்கள் சிலரும், ஊர்க்காரர்கள் சிலரும் வந்தார்கள். சம்பவம் குறித்து கேள்விபட்டுதான் வந்தேன். எனது கணவருக்கும் எதிரிக்கும் இருந்த முன்விரோதத்தின்காரணமாக எதிரி மீது எனது கணவர் பொய்யாக புகார் அளித்து எனது கணவருக்கு ஆதரவாக இந்த வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால்சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/- செல்லம்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/- திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.